| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>அங்கம்மாள் | அ.வ.எண். 214/2019 | 21.06.2024 |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

3) எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 மற்றும் 6 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. தாவா சொத்து நத்தம் புறம்போக்கு வகைப்பாட்டை சேர்ந்த்தது என்றால் சரிதான், அரசாங்கம் எனக்கு பட்டா வழங்கியுள்ளது. தாவா சொத்திற்கு பிரதிவாதிகளுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தினை பொறுத்து எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் பட்டா எண்.1352 ல் எனக்கு பட்டா வழங்கப்பட்டதை போலவே பிரதிவாதிகளுக்கும் பட்டா எண்.1352 ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் மாட்டுகொட்டகை உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் மாட்டுக்கொட்டகை உள்ளது என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து நத்தம் காலிமனையாக இருந்த காரணத்தினால் அரசாங்கம் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கும் வழங்கியுள்ளார்கள் என்றால் தாவா சொத்து காலிமனையாக இல்லை, வேறு ஒருவரின் பராமரிப்பில் இருந்தது எனது பெயரில் பட்டா இருப்பது தெரியாமல் அவர்களிடம் ரூ.10,000/- பணம் கொடுத்து தாவா சொத்தை கிரையமாக பெற்றேன், அதற்கு பின்னிட்டு தான் தாவா சொத்தை பொறுத்து பட்டா எனது பெயரில் இருப்பது எனக்கு தெரியவந்தது.

4) மேற்படி விபரத்தை எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்ற விபரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ரூ.10,000/– கொடுத்து கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் என் வசம் உள்ளதா என்றால் இல்லை, நான் எழுதி வாங்கவே இல்லை. நான் சொல்வது போல் மேற்படி எந்த கிரையமும் நடக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி நான் இந்த வழக்கை பொய்யாக காரணங்களை குறிப்பிட்டு விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.